# சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்

## OS.No.81/2017

### வாதி தரப்பு சாட்சி–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்னுரங்கன் | தகப்பனார் பெயர் | : | பார்த்தீபன் |
| கிராமம் | : | தாண்டேகுப்பம் | வட்டம் | : | அரூர் |
| தொழில் | : | ஆசிரியர் | வயது | : | 40 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 01st day of June 2026

PW–1

1ம் வாதி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் 1ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

1. 22.04.2017–ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு எங்களின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரில் உள்ள சிட்டா, பட்டா (பட்டா எண்.246) கணினி நகல் வா.சா.ஆ.1

2. 22.04.2017–ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு எங்களின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரில் உள்ள சிட்டா, பட்டா (பட்டா எண்.251) கணினி நகல் வா.சா.ஆ.2

3. 22.04.2017–ம் தேதியிட்ட 7ம் பிரதிவாதி பெயரில் கட்டவடிச்சாம்பட்டி சொத்திற்கு மோசடியாக பெற்றுள்ள சிட்ட/பட்டா (பட்டா எண்.19)கணினி நகல் வா.சா.ஆ.3

4. 22.04.2017–ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.4

5. 16.05.2013–ம் தேதியிட்ட 7ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக ஏற்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5

மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.01 15:53:32 +0530